Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 061 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 31.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## வைகாசி விசாக திருவிழா கோலாகலம்:

# திருச்செந்தூர் கோயிலில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கடலில் புனித நீராடி தரிசனம்



திருச்செந்தூர்: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வைகாசி விசாகத்திருவிழாவை முன்னிட்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கடலில் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர். தமிழ்க்கடவுள் முருகப்பெருமான் அவதரித்த ஜென்ம நட்சத்திர திருவிழாவான வைகாசி விசாகத்திருவிழாதிருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வசந்த திருவிழாவாக கடந்த மே மாதம் 21ம் தேதி தொடங்கி, பத்து நாட்கள் நடைபெறுகிறது. விழா நாட்களில் தினமும்கோயிலில் உச்சிகால தீபாராதனைக்குப் பின்பு சுவாமி ஜெயந்திநாதர் திருக்கோயிலிலிருந்து தங்கச்சப்பரத்தில்எழுந்தருளி ராஜகோபுரம் எதிரே உள்ள வசந்த மண்டபம் சேர்ந்தார்.

அங்கு மாலையில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக,அலங்கார தீபாராதனை நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து மண்டபத்தை சுவாமி 11 முறை வலம் வரும் வைபவமும் நடைபெற்றது. இவ்வைபவத்தின் போது ஒவ்வொரு சுற்றிலும் வேதபாராயணம், தேவாரம், திருப்புகழ், பிரம்மதாளம், நந்தி மத்தளம், சங்கநாதம், பிள்ளைத்தமிழ், நாதசுரம், வேல்வகுப்பு, வீரவாள் வகுப்பு, கப்பல் பாட்டு முதலானவைகள் பக்தர்களால் பாடப்பெற்றன. அதன் பின்னர் சுவாமிக்கு சிறப்பு தீபாராதனை நடந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து 9 நாட்கள் நடந்த விழாவின் 10ம் நாள் இன்று வைகாசி விசாகத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு கோயில் அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்பட்டு,1.30மணிக்குவிஸ்வரூபதரிசனம்,6மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், காலை 10 மணிக்கு உச்சிகாலஅபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. அதன்பின்னர் சுவாமி ஜெயந்திநாதர் திருக்கோயிலிலிருந்து சண்முக விலாச மண்டபம் சேர்ந்தார். மாலை அங்கு வைத்து சுவாமிக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார தீபாராதனை நடைபெற்று அதனைத்தொடர்ந்து மண்டபத்தை சுவாமி 11 முறை வலம் வரும் வைபவமும், விழாவின் முக்கிய நிகழ்வான முனிக்குமாரர்களுக்கு சாபவிமோசனம் அளிக்கும் வைபவமும் நடைபெறுகிறது.

பின்னர் மகா தீபாராதனை ஆகி சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி, தெய்வானையுடன் இருப்பிடம் சேர்ந்து நிறைவு பெறுகிறது. வைகாசி விசாகத்திருவிழாவில் சுவாமியை தரிசனம் செய்வதற்காகவே கடந்த சில நாட்களாவே திருச்செந்தூருக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் விரதமிருந்து, பாதயாத்திரையாக வந்ததால் திருக்கோயில் வளாகமே பக்தர்களால் நிரம்பி வழிந்தது. குறிப்பாக இராமநாதபுரம், விருதுநகர், மதுரை, தென்காசி,நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் அதிகாலையிலிருந்தே கடலில் புனித நீராடியதால் கடற்கரையில் அலைபோல் மக்கள் வெள்ளம்காணப்பட்டது.

மேலும் பல்வேறு வாகனங்களிலும் பக்தர்கள் நேற்று மாலை முதலே திருச்செந்தூர் வந்ததால் கோயில் வளாகத்தில் அதிகளவில் பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது. பக்தர்கள் காவடி, அலகு குத்தியும், பால்குடம் மற்றும் அங்கப்பிரதட்சணை மற்றும் அடிப்பிரதட்சணை செய்தும் தங்கள் நேர்த்திகடனை சுவாமிக்கு செலுத்தினர். கூட்ட நெரிசல் காரணமாக திருக்கோயில் வளாகம், கடற்கரை உள்ளிட்ட இடங்களிலே பக்தர்கள் தாங்களே தங்கள் தேங்காய் பழங்களை உடைத்து பூஜை செய்து விட்டு சென்றனர். ஆங்காங்கே பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். முருகனின் ஆறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறும் சிறப்பு பெற்ற விழாக்களில் முதன்மையானது வைகாசி விசாகம். இதனை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால்குடம் மற்றும் காவடிகள் எடுத்து வந்து சுவாமி தரிசனம் செய்தனர். திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில், வைகாசி விசாக விழா கடந்த 21-ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.

விழாவினை முன்னிட்டு தினமும் சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன்சிறப்பு அலங்காரத்தில் கோயில் வசந்த மண்டபத்தில் எழுந்தருளும் நிகழ்வும், அங்கு விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் எழுந்தருளும் சுப்பிரமணிய சுவாமி தெய்வானைக்கு சிறப்பு தீபாராதனையும் நடைபெற்று வந்தது. இந்நிலையில்,விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இன்று வைகாசி விசாகத்தையொட்டி, அதிகாலை முதல் பக்தர்கள் பால்குடம் எடுத்து வரத் தொடங்கினர்.

முன்னதாக, உற்சவர் சன்னதியில் சண்முகர் வள்ளி தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்று, கோயில் விசாக கொறடு மண்டபத்தில் எழுந்தருளிய நிலையில், சண்முகர் வள்ளி தெய்வானைக்கு சிறப்பு பாலாபிஷேகம் நடைபெற்றது.

# டெல்டா மாவட்ட நீர்நிலைகளில் தூர்வார வேண்டும்: எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



சென்னை:மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதற்கு முன்பாக டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் தூர்வார வேண்டும் எனஅதிமுகபொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிமுக ஆட்சியில், ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்குதண்ணீர்திறந்துவிடும் ஜூன் 12-ம் தேதிக்கு முன்பே, டெல்டா மாவட்டங்கள் முழுவதும் உள்ள பாசன வாய்க்கால்கள், ஆறுகள் போன்ற நீர் நிலைகள் அனைத்தும் தூர்வாரப்பட்டு பாசனத்துக்கு தண்ணீர் தங்கு தடையின்றி சென்றது.

மழைக் காலங்களில் நீர் நிலைகளில் தடுப்பின்றி வெள்ள நீர் வேகமாக வடிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக, 2011-ம் ஆண்டு கால கட்டத்தில் டெல்டா மாவட்டங்களில் நெய்வேலி காட்டாமணக்கு என்ற செடி நீர் நிலைகள் முழுவதும் ஆக்கிரமித்து பாசனத்துக்கு,கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்வதில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. அவற்றை முழுமையாக அகற்றி, வரை நெய்வேலி காட்டாமணக்கு என்ற செடி டெல்டா மாவட்டங்களில் எங்கும் இல்லை என்ற நிலையை உருவாக்கினோம். டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணியையும், ஆறுகளின் கட்டமைப்புப் பணிகளையும், அந்தந்த பகுதிகளில் உள்ள பதிவு பெற்ற விவசாயசங்கங்களுக்கே வழங்கி, விவசாயிகளே தூர்வாரும் பணியை மேற்கொண்டதால், இப்பணி 100 சதவீதம் முறையாக நடைபெற்றது.

கடந்த ஆட்சியில் டெல்டா மாவட்டங்களில் முறையாக தூர்வாரப்படவில்லை. இந்த ஆண்டும் தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, டெல்டா மாவட்டங்களில் சிமற்றும் டி வாய்க்கால்கள் அவசர கோலத்தில் தூர்வாரப்பட்டன.இதனால் ஜூன் மாதம் மேட்டூர் அணையில் திறந்து விடப்படும் தண்ணீர் முழுமையாக டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதிகளில் சென்றடையாமல் விவசாயப் பணிகள் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, புதிதாகப் பொறுப் பேற்றுள்ள அரசு,டெல்டாமாவட்டங்களில் அனைத்து நீர் நிலைகளிலும் தேங்கிக் கிடக்கும் ஆகாயத்தாமரையை அகற்றி,இந்தஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை பகுதிவரை முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

- மணமாலை
- கோவில் திருவிழா
- அரசியல் நிகழ்வுகள்
- கல்வி
- திருமண நாள்
- பிறந்த நாள்
- ஆண்டு விழா
- திறப்பு விழா
- வீட்டு சுப நிகழ்ச்சிகள்
- நினைவு நாள்
- ரியல் எஸ்டேட்
- பைனான்ஸ்
- நகைக்கடன்
- வேலை வாய்ப்பு
- ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# மேகேதாட்டு அணையை முற்றுகையிட தஞ்சையில் இருந்து புறப்பட்ட தமிழக விவசாயிகள்



தஞ்சாவூர்: கர்நாடக மாநிலம் மேகேதாட்டு பகுதியில் அணை கட்டும் கர்நாடக அரசின் செயலைக் கண்டித்து, முற்றுகை போராட்டம் நடத்துவதற்காக தஞ்சாவூரிலிருந்து காலை தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தினர் பேரணியாக புறப்பட்டுள்ளனர். கர்நாடகா அரசு காவிரியின் குறுக்கே மேகேதாட்டு என்ற இடத்தில் தடுப்பு அணையை கட்டி தண்ணீரை தடுத்து, கர்நாடகா மாநிலத்தின் பாசனத்திற்காக பயன்படுத்த உள்ளது. இதனால் தமிழகத்துக்குவரக்கூடியதண்ணீர் வராமல் தடுத்து நிறுத்தப்படுவதால், தமிழகம் கடுமையாக பாதிக்கப்படும் சூழல் உருவாகும்.

எனவே, கர்நாடக அரசு மேகேதாட்டு அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். கர்நாடகா அரசு தமிழகத்துக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி மாதாந்திர நீர் பங்கிட்டை வழங்க வேண்டும். இரு மாநில விவசாயிகளின்நலனை கருத்தில் கொண்டு ராசிமணல்என்றஇடத்தில் அணைகட்ட அனுமதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தினர் நாளை 31-ம் தேதி காலை 10 மணிக்கு மேகேதாட்டு பகுதியில் முற்றுகைப் போராட்டத்தை நடத்த உள்ளனர்.

அதற்காக இன்று காலைதஞ்சாவூர்பெரிய கோயில் முன்பாக உள்ள மாமன்னன் ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்து அங்கிருந்து தங்களது வாகன பேரணியை தொடங்கினர். இந்தப் பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து திருச்சி, நாமக்கல்,சேலம்,தர்மபுரி, வழியாக ஓசூர் சென்றடைந்து, நாளை மேகேதாட்டு பகுதிக்கு செல்ல உள்ளனர்.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## "கோட்டூர்புரத்தில் போராடியவர்களை கைது செய்தது தவெக அரசின் சர்வாதிகாரப் போக்கு" தினகரன் பேச்சு



சென்னை: 'கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகளை காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது' எனஅமமுகபொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை கோட்டூர்புரத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒப்படைக்கக் கோரி போராடிய பயனாளிகள் மீது காவல் துறையை ஏவி கைது செய்திருக்கும் தவெக அரசின் அடக்குமுறை கடும் கண்டனத்துக்குரியது.

தங்களின் உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய துறை சார்ந்த அமைச்சரும், சட்டப்பேரவை உறுப்பினரும் வராமல் காவல் துறையை பயன்படுத்தி, அவர்களை ஒடுக்க நினைப்பது சர்வாதிகாரப் போக்கே தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

எனவே, பயனாளிகளுக்கான வீடுகள் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படுவதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும், தவெக அரசும் உறுதிசெய்யவேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## 'சென்னை முதல் தேனி வரை...' குற்றச் சம்பவங்களை அடுக்கி தவெக அரசு மீது பிரேமலதா விமர்சனம்



சென்னை: "தமிழக முதல்வர் கவனம் செலுத்தி, சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமை, பெண்கள் மற்றும்குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக வடபழனி காவல் நிலைய தலைமைக் காவலர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவரே இத்தகைய குற்றச் செயலில்ஈடுபட்டதாகவெளியாகியுள்ள தகவல் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், சென்னை வேளச்சேரி பேருந்து நிலையம் அருகே 61 வயது மூதாட்டி ஒருவர் காயங்களுடன் மயக்க நிலையில் கிடந்துள்ளார். அந்த மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வயது முதிர்ந்த பெண்கள்கூட பாதுகாப்பாக வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயது முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் மனிதநேயத்தை தலைகுனியச் செய்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை இந்தச் சம்பவம் மீண்டும் எழுப்பியுள்ளது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடைபெற்ற திருமண வீட்டில் முகமூடி அணிந்த கும்பல் ஒன்று புகுந்து அங்கிருந்தவர்களைசரமாரியாகவெட்டிய சம்பவம் சட்டம் - ஒழுங்கு நிலை குறித்து மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கடலூர் மாவட்டம் வடலூர் அருகே மண்ணில் அரைகுறையாக புதைக்கப்பட்ட நிலையில் 30 வயது இளம்பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் உயிர் மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது தமிழக மக்களிடையே மிகுந்த வேதனையையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்கியுள்ளது.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பாதுகாப்பாக வாழும் சூழலை உறுதி செய்வது அரசின் முதன்மை பொறுப்பாகும்.

எனவே, தமிழக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் வன்கொடுமை, கொலை மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக மேலும் கடுமையான மற்றும் விரைவான தண்டனை நடைமுறைகளை கொண்டு வர வேண்டும்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துஅரசுக்குவாய்ப்பு வழங்கியுள்ளனர். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது மக்களிடையே ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்துகிறது.

தமிழக முதல்வர் நேரடியாக இந்த விவகாரங்களில் கவனம் செலுத்தி, சட்டம் - ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பவங்களைப் பார்க்கும்போது, 'வேலியேபயிரைமேய்ந்தது' என்ற பழமொழிக்கு ஏற்ப நிகழ்வுகள் நடந்துள்ளது மிகவும் வேதனைக்குரியதும், தலைகுனிவானது என்று அவர் கூறியுள்ளார்.

## அரக்கோணம் யார்டில் பொறியியல் பணி: மின்சார ரயில் சேவை 5 நாட்களுக்கு மாற்றம்



சென்னை: சென்னை சென்ட்ரல் - அரக்கோணம் மார்க்கத்தில், அரக்கோணம் யார்டில் ரயில்வே பொறியியல் பணி நடக்கவுள்ளதால், ஜூன் 1 முதல் 5-ம் தேதி வரை 48 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளன.

அதன் விவரம்: அரக்கோணம்-திருத்தணிக்கு ஜூன் 1 முதல் 5-ம் தேதி வரை அதிகாலை 4.00, 5.00 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரயில்கள், திருத்தணி - அரக்கோணத்துக்கு அதேநாட்களில் இரவு 9.15, 11.10 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் ரயில்கள், திருத்தணி - சென்னை சென்ட்ரலுக்கு அதேநாட்களில் காலை 6.30 மணிக்கு இயக்கப்படும்மின்சாரரயில்ஆகிய 5 மின்சார ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட உள்ளன

சென்னை கடற்கரை - அரக்கோணத்துக்கு ஜூன் 1 முதல் 5-ம் தேதி வரை அதிகாலை 4.05 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில், ஆவடி - அரக்கோணத்துக்கு அதேநாட்களில் காலை 6.20 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில், சென்னை சென்ட்ரல் - அரக்கோணத்துக்கு காலை 6.30, 9.10, 10.30, பகல் 11.00, 12.40, மதியம் 1.25, பிற்பகல் 3.45, மாலை 4.45, 5.15, 5.45, 6.05, 6.40, இரவு 7.30. 7.45. 8.20, 9.10, 10.00, 10.55 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் ரயில்கள், திருவாலங்காடு - அரக்கோணம் இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளன.

21 மின்சார ரயில்கள், அரக்கோணம் - திருவாலங்காடு இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளன. மொத்தம் 48 மின்சாரரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. திருத்தணி - சென்னை சென்ட்ரலுக்கு ஜூன் 1 முதல் 5-ம் தேதி வரை காலை 6.20 மணிக்கு சிறப்பு மின்சார ரயில் இயக்கப்பட உள்ளதாக சென்னை ரயில்வே கோட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## "திடீர் கொந்தளிப்பு ஏன்?" திருச்செந்தூர் எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணனுக்கு அமைச்சர் ரமேஷ் பதில்

சென்னை: திருச்செந்தூர் கோயிலில் அமைச்சர் ரமேஷ் திடீர் ஆய்வில் ஈடுபட்டபோது, அர்ச்சகர்களை இழிவுபடுத்தியதாக திமுக எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஷ், 'கோயிலில் முறைகேடு செய்பவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர் எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணன் தனது எக்ஸ் தள பக்கத்தில், அமைச்சர் ரமேஷின் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரை குறிப்பிட்டு ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், "திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு வருகை தருகின்றனர். திருவிழா காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் தங்களது வேண்டுதல் நிறைவேற சுவாமி தரிசனம் பெறுகின்றனர்.

வைகாசி விசாக திருவிழா நாளான இன்று சுவாமி தரிசனத்துக்காக விரதம் இருந்து காவடியேந்தி, பல நாட்கள் கால்நடையாக நடந்து வந்தும் சுவாமி தரிசனம் செய்து வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர்.

இந்நிலையில், திடீர் ஆய்வு என்ற பெயரில் புதியதாக பொறுப்பேற்ற அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் காலங்காலமாகபக்தர்களுக்கு சேவை செய்து வரும்திருசுதந்திரஅர்ச்சகர் சமுதாயத்தை சார்ந்த அர்ச்சர்களை இழிவுபடுத்தியது மிகவும் கண்டனத்துக்குரியது ஆகும்.

பல நூற்றாண்டுகளாக திருச்செந்தூர் திருக்கோயிலில் வேண்டுதலுடன் வருகின்ற பக்தர்களுக்குசுவாமிதரிசனம் செய்வதற்கான வழிகாட்டுதலும் உதவியும் திருசுதந்திர அர்ச்சகர்கள் செய்து வருகின்றனர்.

பலவெளி ஊர்களிலும் வெளி மாநிலங்களிலும் பல்வேறு குடும்பங்களுக்கு கட்டளை ஐயர்களாக திருசுதந்திர அர்ச்சகர்கள் மரபுவழி பொறுப்பை நிறைவேற்றி வருகின்றனர். அறநிலையத் துறையை சார்ந்தவர் அல்லாத திருசுதந்திர அர்ச்சகர்கள் காலம் காலமாக மரபுவழியாக இந்த சுவாமி தரிசன உதவியை செய்து வருகின்றனர். பக்தர்கள் தரும் தட்சணையை பெறுகின்றனர்.

இந்த நிலையில், திருசுதந்திர அர்ச்சகர்கள் செய்யும் ஆன்மிகப் பணியை இழிவுபடுத்தியுள்ளார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ்.

அறநிலையத் துறை அமைச்சரின் இந்தச் செயல் திருசுதந்திர அர்ச்சகர் சமுதாயத்தினரிடம் பெரும் மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் உள்ளூர் மக்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கான வழிமுறை பற்றிய எந்த அறிவிப்பும் வெளியிடாதது சரியானதல்ல என்று ஊர் மக்கள் கருதுகின்றனர்.

திருச்செந்தூர்தொகுதி அனைத்து சமுதாய மக்களின் நலனை வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கு 7-வது முறையாக வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்என்றமுறையில் எனது பணி இருந்துவரும் நிலையில் திருசுதந்திர அர்ச்சகர் சமுதாயத்தை இழிவுபடுத்தியதோடு, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் புகழை சிறுமைப்படுத்திய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷுக்கு எனது வன்மையான கண்டனத்தை மீண்டும் அழுத்தமாகபதிவுசெய்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரமேஷ் பதில்:

இதற்கு பதிலளித்துள்ள அமைச்சர்ரமேஷ் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களே... (உங்களை போல் பெயருக்கு பின்னால் சாதிப் பெயர் போடும் வழக்கம் உண்மையில் பெரியாரை பின்பற்றுவர்களுக்கு கிடையாது) மக்களை சுரண்டி பிழைப்பது யாராக இருந்தாலும் சாதி,மதபாகுபாடு இன்றி நடவடிக்கை எடுக்கத்தான் மக்கள் வாக்களித்து வெற்றி பெறசெய்துள்ளனர்.


பக்தர்களிடம் சட்டத்துக்கு புறம்பாக பணம் பெற்றுதான் சேவை செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை, அப்படி செய்வது சேவையும் இல்லை, அதை எந்தக் கடவுளும் செய்ய சொல்லவும் இல்லை.

நேற்று வரை சாதியை வைத்து ஆதரவாக செயல்படுகிறேன் என்று திமுகவினர் பேசினீர்கள். இன்று அதே சாதியை சார்ந்தவர்களை அவமதித்து விட்டதாக பேசுகிறீர்கள்.

தவறு செய்தவர்களை தண்டித்தால் தங்களுக்கு எதற்காக திடீர் கொந்தளிப்பும் பதற்றமும் வருகிறது என்பது தெரியவில்லை.

இன்னும் பல முறைகேடுகள் திருச்செந்தூர் திருக்கோயிலில் நடந்து வருவதை விரைவில் வெளிக்கொணர்வேன், அதில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். அது யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## காவல் துறையில் மாநில பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு: அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



மதுரை: தமிழக காவல் துறையில் காவலர்களுக்கு மாநில அளவிலான பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கவேண்டும்என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ் நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வில் 2-ம் நிலை காவலர்களாக தேர்வு செய்யப்படுபவர்கள், காவல் துறையில் 10 ஆண்டுகள் பணி முடித்த பிறகு முதல் நிலை காவலர்களாகவும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு தலைமைக் காவலர்களாகவும், அடுத்து சிறப்பு சார்பு ஆய்வாளராகவும் பதவி உயர்வு வழங்கப்படும்.

வர்களில் முதல் நிலை காவலர்களாக தேர்வு செய்யப்பட்டு மதுரை, திருச்சி, நெல்லையில் ஆயுதப் படைக்கு மாற்றம் செய்யப்படும் போது, அங்குள்ள காலிப் பணியிடங்களின் அடிப்படையில் அவர்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைத்துவிடுகிறது.

சரக அளவில் பதவி உயர்வு வழங்கப்படுவதால் பணியில் இளையவர்களின் கீழ் பணியாற்றும் நிலை ஏற்படுகிறது. சென்னை போன்ற பெரு நகரங்களில் காவல்துறையில் காலி பணியிடங்கள் குறைவாக இருப்பதால் விரைவில் பதவி உயர்வு கிடைப்பதில்லை.


இந்நிலையில், 170 காவலர்கள் விரைவில் பதவி உயர்வு வழங்கக் கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்தனர். இந்த மனுக்களை நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், என். செந்தில்குமார் அமர்வு விசாரித்தது.

தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தாக்கல் செய்த பதில் மனுவில், ஆயுதப்படையில் 2-ம் நிலை காவலர்களாக தேர்வாகும் நாளிலிருந்து கணக்கீடு செய்து சிறப்பு சார்பு ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், ஆய்வாளர் பதவி உயர்வுக்கு மாநில அளவிலான பணி மூப்பு முறை அமல் படுத்தப்படும் என கூறப்பட்டிருந்தது.

பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: காவலர்களுக்கு மாநில அளவிலான பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும். அரசின் முடிவின்படி ஆயுதப்படையில் 1993 பேட்ஜில் தேர்வாகி இது வரை பணியில் உள்ளவர்களுக்கு மாநில அளவிலான பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

இதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு உடனடியாக பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மாநில அளவிலான சீனியாரிட்டி 2026 ஜன. 1-ம் தேதி பணியில் இருப்பவர்களிடம் இருந்து அமல்படுத்தவேண்டும். 2025 டிச. 31-ம் தேதி அல்லது அதற்கு முன்பு பணி ஓய்வு பெற்றவர்களுக்கு இது பொருந்தாது.

# மேட்டூரில் சூறாவளிக் காற்றுடன் மழை: மின்கம்பங்கள், மரங்கள் விழுந்து 3 வீடுகள் சேதம்



மேட்டூர்: மேட்டூரில் பலத்த சூறாவளி காற்றுடன் பெய்த மழையால் மின்கம்பங்கள், மரங்கள் முறிந்துவிழுந்து 3 வீடுகள் சேதமடைந்தன. மேலும், 2 சிறுமிகள் காயமடைந்த நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மே 4-ம் தேதி அக்னி நட்சத்திம் தொடங்கிய நிலையில், சேலம் மாவட்டத்தில் கடும் கோடை வெப்பம் தாக்கி வந்தது. கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்ததால் கோடையின் வெப்பம் சற்று குறைந்து காணப்பட்டது. தற்போது, அக்னி நட்சத்திரம் முடிந்த நிலையில் நேற்று மாலை வானம் மேகமூட்டமாக இருந்த நிலையில், இரவு திடீரென பலத்த காற்று வீசியது.

குறிப்பாக, மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதன் காரணமாக, ஆங்காகங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்தன, மின்கம்பங்களும் சேதமடந்தன. இதனால் இரவில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் நிறுத்தப்பட்டது. மேலும், மழைநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது.

மேட்டூரில் பெய்த கனமழையால் செக்கானூர் அடுத்த ஜெ.ஜெ. நகரில் மின்கம்பங்கள் சாய்ந்து வீடுகள் மீது விழுந்து சேதம் அடைந்தது. இதனையறிந்த மினவாரிய ஊழியர்கள் உடனடியாக மின்விநி யோகத்தை துண்டித்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் இரவு முழுவதும் மின்சாரம் தடைபட்டதால் பொதுமக்கள் அவதி அடைந்தனர். இதேபோல அப்பகுதியில் இருந்த ராட்சத மரம் ஒன்று முறிந்து வீடுகள் மீது விழுந்தது. இதில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ரகுபதி என்பவரின் குழந்தைகளான கிருஷ்க்கா(4), கிருஷ்தா (4) ஆகிய 2 சிறுமிகள் காயம் அடைந்தனர். இதையடுத்து இருவரையும் மீட்கப்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை வருகின்றனர்.

மேலும் இந்த விபத்தில் வீடுகளில் இருந்த கட்டில், பீரோ, பிரிட்ஜ், டிவி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் சேதம் அடைந்தன. இதனையடுத்து இன்று காலை அப்பகுதிக்கு வந்த மின்வாரிய ஊழியர்கள் உடைந்த மின் கம்பங்களை சரி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் வீடுகள் மீது விழுந்த ராட்சத மரங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து, வருவாய் துறை அதிகாரிகள் சேதமடைந்த வீடுகள், பொருட்களை கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, முதற்கட்டமாக 3 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், சேதம் அடைந்த வீடுகளுக்கும் வீட்டிலிருந்த பொருட்களுக்கும் அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

சேலம் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில்: எடப்பாடி 51, சங்ககிரி 46.2, மேட்டூர் 41, டேணிஷ்பேட்டை 23, கரியகோவில் அணை 20, ஓமலூர் 2, சேலம் மாநகரம் 1.3, ஆத்தூர் 1 என மொத்தமாக 185.50 மில்லி மீட்டர் மழை பதிவானது.

# யூரியாவுடன் இணை பொருட்களை கட்டாயப்படுத்தி விற்கும் நிறுவனங்கள் உரக்கடை சில்லறை வியாபாரிகள் தவிப்பு



டெல்டா மாவட்டங்களில் யூரியாவுடன் இணைப் பொருட்களை கட்டாயப்படுத்தி நிறுவனங்கள் விற்பனை செய்வதால், உரக்கடை சில்லறை வியாபாரிகள் தவிக்கின்றனர்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, காரைக்கால், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களில் பிரதானமாக நெல் சாகுபடியும், அதற்கடுத்து கரும்பு, பருத்தி, வாழை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியும் நடைபெறுகின்றன.

இந்த அனைத்து பயிர்களின் வளர்ச்சிக்கும் யூரியா உரம் பயன்படுத்துவது கட்டாயமாக உள்ளது. இந்நிலையில், உரங்களின் விலையை மத்திய அரசு ஆண்டுதோறும் ஏற்றிவருவதுடன், டிஏபி, பொட்டாஷ் போன்ற உரங்களைவிட பல மடங்கு அதிகளவு மானியத்தை யூரியாவுக்கு வழங்கி வருகிறது.

இதனால், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை ரூ.266 என்ற அளவில் 2018-ம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

விவசாயத்துக்கு மட்டுமின்றி பல்வேறு தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும் யூரியா பயன்படுத்தப்படுவதால், பயோமெட்ரிக் முறையில் ஓர் ஆதார் எண்ணுக்கு 10 மூட்டைகளுக்கு மேல் யூரியா பெற முடியாத வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து யூரியா விற்பனையை மத்திய அரசு செய்து வருகிறது.

இந்நிலையில், ஒரு டன் யூரியாவுக்கு இணை பொருளாக ஒரு டன் நுண்ணூட்ட உரங்களையும் வாங்கினால் மட்டுமே யூரியா விற்பனை செய்யப்படும் என வியாபாரிகளிடம் யூரியா உற்பத்தி நிறுவனங்கள் வற்புறுத்துகின்றன. வேறு வழியின்றி அந்த நுண்ணூட்ட உரங்களை வாங்கும் வியாபாரிகள், அதை விவசாயிகளிடம் வலுக்கட்டாயமாக விற்பனை செய்கின்றனர்.

இதனால், விவசாயிகளுக்கும், உரக்கடை விற்பனையாளர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்படுவதால், பல சில்லறை வியாபாரிகள் யூரியா உர விற்பனையையே தவிர்த்து வருகின்றனர்.

இதுகுறித்து உர விற்பனையாளர்கள் சங்க நிர்வாகி ஒருவர் 'இந்து தமிழ்திசை' நாளிதழிடம் கூறியது: ஒரு டன் யூரியா ரூ.5,775, லாரி வாடகை ரூ.450, கூலி ரூ.75 என ரூ.6,300 செலவாகிறது. இதன்படி, ஒரு மூட்டை விலை ரூ.283. ஆனால், அதன் எம்ஆர்பி ரூ.266. இதுபோக, ஒரு டன் யூரியாவுக்கு திணிக்கப்படும் நுண்ணூட்ட உரத்தின் விலை ரூ.4,000.

எனவே, ஒரு டன் யூரியா வாங்க ரூ.10,300, அதாவது ஒரு மூட்டைக்கு ரூ.464 செலவாகிறது. இதேபோல, டிஏபி உரத்துக்கும் ஒரு டன்னுக்கு ரூ.8 ஆயிரம் மதிப்பில் நுண்ணூட்டங்கள் வியாபாரிகளிடம் வற்புறுத்தி விற்பனை செய்யப்படுகின்றன.

அதை வாங்க விவசாயிகள் மறுக்கும்போது, வாக்குவாதங்கள் ஏற்படுவதுடன், வியாபாரிகள் நஷ்டம் அடையும் சூழலும் ஏற்படுகிறது. தமிழக அரசிடம் இதுதொடர்பாக பலமுறை மனு அளித்தும் இதுவரை இருந்த அரசுகள் கண்டுகொள்ளவில்லை.

தற்போது புதிதாக பொறுப்பேற்றிற்கும் தவெக அரசு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக மட்டுமே யூரியா விற்பனையை மேற்கொண்டால்தான், இணை பொருட்கள் இல்லாமல் விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி யூரியா உரம் கிடைப்பதை உறுதிசெய்ய இயலும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஒவ்வொரு ஆண்டும் 70 லட்சம் பேர் உயிரிழப்பு; புகையிலை பழக்கத்திலிருந்து இளைஞர்களை பாதுகாக்க வேண்டும்: மருத்துவர் நரசிம்மன் வலியுறுத்தல்



சென்னை: உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 70 லட்சம் பேர் புகையிலையால் உயிரிழக்கின்றனர், இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த நுரையீரல் நிபுணர் மருத்துவர் நரசிம்மன் கூறியதாவது: உலக புகையிலை ஒழிப்பு தினம் ஆண்டுதோறும் மே-31ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு இளைஞர்களை புகையிலை மற்றும் நிக்கோட்டின் பழக்கத்திலிருந்து பாதுகாப்போம் என்ற கருப்பொருளில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 70 லட்சத்துக்கும் மேற்பட்டோர் புகையிலை நேரடியாக உட்கொள்வது மூலமாகவும், 16 லட்சம் பேர் மறைமுகமாகவும் உயிரிழக்கின்றனர்.

தற்போது பெரியவர்கள் மத்தியில் புகை பழக்கம் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது, ஆனால் துரதிர்ஷ்டவசமாக பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் வேப்பிங் (இ-சிகரெட்) கலாச்சாரம் அதிகரிக்க தொடங்கியுள்ளது.

புகையிலையை உட்கொள்வதை விட இது பாதுகாப்பானது என்ற தவறான எண்ணம் உள்ளது. புகையிலையை புகைப்பதால் என்ன பாதிப்புகள் ஏற்படுமோ அவை அனைத்தும் இந்த வேப்பிங் மூலமாகவும் வரும்.

இது இளைஞர்களின் மூளை வளர்ச்சியையும், மனநலத்தையும் பாதிக்கிறது. மேலும் மற்ற போதைப் பழக்கத்துக்கு தொடக்க புள்ளியாகவும் அமைந்துவிடுகிறது.

நீண்ட காலமாக புகைப் பிடிப்பவர்களில் 50 சதவீதம் பேர் புகையிலை தொடர்பான நோய்களால் தான் உயிரிழக்கின்றனர். புகைப்பிடித்தல் என்பது நுரையீரல் புற்றுநோய், இதய நோய், பக்கவாதம், காச நோய் மற்றும் பல்வேறு சுவாச நோய்களுக்கு நேரடி காரணமாக உள்ளது.

பள்ளி - கல்லூரிகளுக்கு அருகில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இளைஞர்களை ஆரம்ப கட்டத்திலேயே புகைப் பழக்கத்தில் இருந்து தடுத்துவிட்டால், அவர்களுடைய எதிர்காலம் புகையில்லா எதிர்காலமாக, ஆரோக்கியமானதாக இருக்கும்.

பெற்றோரும் ஆசிரியர்களும் புகையிலை இல்லாத முன்னுதாரணங்களாக இருப்பது மிகவும் அவசியம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேகேதாட்டு அணை விவகாரம்: அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்ட மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்



தஞ்சாவூர்: கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டுவதை கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் (எம்-எல்) லிபரேசன் கட்சி சார்பில் தஞ்சாவூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் (எம்-எல்) மாநில நிலைக் குழு உறுப்பினர் அ.சிம்சன், நாகை எம்.பி. வை.செல்வராஜ், எம்எல்ஏக்கள் க.மாரிமுத்து, டி.லதா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக பெ.சண்முகம், மு.வீரபாண்டியன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியது: உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, 4 மாநிலங்களுடைய அனுமதி இல்லாமல் எந்த ஒரு மாநிலமும் காவிரி சம்பந்தப்பட்ட பிரச்சினையில் புதிய கட்டுமானங்களில் ஈடுபட முடியாது.

ஆனால், கர்நாடக அரசு அதை மீறி நடந்து கொள்வது இரு மாநில மக்களிடையே நல்லுறவைக் கெடுக்கும். காவிரி விவகாரத்தில் நமது உரிமைகளை நிலைநாட்டி தமிழக அரசு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

முந்தைய ஆட்சியாளர்களைப் பின்பற்றி, தமிழகத்தின் நலன்களை விட்டுக் கொடுக்க கூடாது. இது தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்தி ஆலோசனையைப் பெற வேண்டும் என்றனர்.

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் 6 மாதங்களுக்குள் அறங்காவலர்கள் நியமனம்: உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி



சென்னை: சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் 47ஆண்டுகளாக கோயில் செயல் அலுவலரே தக்காராக நியமிக்கப்பட்டு வருவதால், அரசு அதிகாரியாக உள்ள செயல் அலுவலரை தக்காராக நியமிக்க கோரி, டி.ஆர். ரமேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது, செயல் அலுவலர்கள் கோயிலின் மத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மனுதாரர் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டது.

மத நடவடிக்கைகளில் தலையிட செயல் அலுவலர்களுக்கு என்ன உரிமை உள்ளது? அறங்காவலர்கள் எப்போது நியமிக்கப் படுவார்கள் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கூடுதல் தலைமை வழக்கறிஞர் பி.வி.பாலசுப்ரமணியம், அறங்காவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. நியமன நடைமுறைகளை முடிக்க 6 மாதங்கள் ஆகும் என தெரிவித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், 6 மாதங்களுக்குள் அறங்காவலர் நியமன நடைமுறைகளை முடிக்கும் படி உத்தரவிட்டனர்.

மேலும், கோயில் செயல் அலுவலர்கள் மத நடவடிக்கைகளில் தலையிடக் கூடாது என்றும், கோயிலின் மரபு, பழக்க வழக்கங்கள் தெரிந்தவர்கள் மட்டுமே அத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தனர்.

# பட்டு வளர்ப்புத் துறையில் புதிய பதவிகளுக்கான சிறப்பு கல்வித்தகுதிகள்: அரசாணை வெளியீடு

சென்னை: தமிழக அரசின் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் காதித் துறையின் செயலர் வி.அமுதவல்லி வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: பட்டு வளர்ப்புத் துறை பணியிடங்களுக்கு சிறப்பு விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்படி, பட்டு வளர்ப்பு உதவி இயக்குநர் நேரடி நியமனத்துக்கு எம்எஸ்சி விவசாயம் (பட்டு வளர்ப்பு) பட்டம் கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்படுகிறது. அதே போல், பட்டு வளர்ப்பு உதவி ஆய்வாளர் பதவிக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி பிஎஸ்சி பட்டு வளர்ப்பு பட்டம் ஆகும்.

பட்டு வளர்ப்பு இளநிலை ஆய்வாளர் பதவிக்கு தோட்டக்கலை அல்லது விவசாயத்தில் டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். அல்லது உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களுடன் பிளஸ்-2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்புத் துறையில் உதவி இயக்குநர், உதவி ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர் ஆகிய பதவிகள் புதிதாக உருவாக்கப்பட்டிருப்பதால் அவற்றுக்கான நேரடி நியமனங்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக விரைவில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை இழந்ததால் அரசின் செவ்வந்தி இல்லத்தை காலி செய்த எடப்பாடி பழனிசாமி



சென்னை: நடந்து முடிந்த தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், அதிமுக குறைந்த தொகுதிகளில் மட்டுமே வென்றதால் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை இழந்த நிலையில், பழனிசாமி தான் தங்கி இருந்த அரசின் செவ்வந்தி இல்லத்தை காலி செய்து சென்னை ராயப்பேட்டையில் நேற்று குடியேறினார்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, கடந்த 2011 சட்டப் பேரவைத் தேர்தலில் எம்எல்ஏவாக வெற்றி பெற்று, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையில் நெடுஞ்சாலை துறை அமைச்சராக பதவியேற்றார். அப்போது அவருக்கு, சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அரசின் செவ்வந்தி இல்லம் வழங்கப்பட்டது. கடந்த 2016 தேர்தலிலும் வெற்றி பெற்று, ஜெயலலிதா அமைச்சரவையில் நீடித்தார். அதனால், அரசின் செவ்வந்தி இல்லத்திலேயே தங்கி இருந்தார்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, கடந்த 2017-ல் முதல்வராக பொறுப்பேற்றார். அப்போதும் செவ்வந்தி இல்லத்திலேயே தங்கி இருந்தார். அதன் பின்னர் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்தது. அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அப்போதும் செவ்வந்தி இல்லத்திலேயே குடியிருந்து வந்தார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக 47 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்று, 3-ம் இடம் பிடித்தது. இதனால் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை இழந்தார். இந்நிலையில், அரசு இல்லங்களை காலி செய்யுமாறு பழனிசாமி மற்றும் திமுக முன்னாள் அமைச்சர்களுக்கு, அரசு சார்பில் கடிதம் அனுப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செவ்வந்தி இல்லத்தை காலி செய்த பழனிசாமி, சென்னை ராயப்பேட்டையில் அதிமுக தலைமை அலுவலகம் அருகில் உள்ள புதிய வீட்டில், முகூர்த்த நாளான நேற்று குடியேறியுள்ளார். இனி கட்சி நடவடிக்கைகளை அங்கிருந்து கவனிப்பார் என அதிமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 717 மதுக்கடைகளும் மூடப்படவில்லை: அன்புமணி குற்றச்சாட்டு



சென்னை: பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: முதல்வர் விஜய் 717 மதுக்கடைகளை மூட உத்தரவிட்டிருந்த நிலையில், பெரும்பான்மையான கடைகள் மூடப்படவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையாக இருந்தால், இந்த விஷயத்தில் அரசின் நடவடிக்கைகள் மிகுந்த ஏமாற்றமளிப்பதாக உள்ளன.

எனவே, எத்தனை மதுக்கடைகள் கடந்த 26-ம் தேதிக்குள் மூடப்பட்டன என்பதை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும். அவற்றில் இதுவரை மூடப்படாத மதுக்கடைகளை மூட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக இப்போது மூடப்படும் 717 மதுக்கடைகளும் வேறு இடங்களில் திறக்கப்படாமல் இருப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## நடிகை ட்விஷா மரணம்: சிபிஐ விசாரணையில் மாமியாரின் வரதட்சணை கொடுமை அம்பலம்





போபால்: நடிகை ட்விஷாவிடம் இருந்த ரூ.20 லட்சம் மதிப்பு பங்குகளை தனது பெயருக்கு மாற்ற மாமியார் கிரிபாலா சிங் வற்புறுத்தி இருப்பது சிபிஐ விசாரணையில் தெரியவந்துள்ளது.

உத்தரபிரதேசம், நொய்டாவை சேர்ந்தவர் ட்விஷா சர்மா. கடந்த 2012-ல் ''மிஸ் புனே'' பட்டம் வென்ற அவர் சில தெலுங்கு, இந்தி படங்களில் நடித்தார். பல நிறுவனங்களுக்கு விளம்பர மாடலாக பணியாற்றினார்

. திரையுலகில் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் மும்பை, டெல்லியில் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களில் மார்க்கெட்டிங் மேலாளராகப் பணியாற்றினார்.

கடந்த 2024-ல் ம.பி. தலைநகர் போபாலைச் சேர்ந்த வழக்கறிஞர் சமர்த் சிங்குடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. 2025-ம் ஆண்டு இறுதியில் இரு வீட்டாரின் சம்மதத்துடன் ட்விஷா சர்மா, சமர்த் சிங் திருமணம் நடைபெற்றது. ட்விஷாவின் மாமியார் கிரிபாலா சிங் ஓய்வு பெற்ற நீதிபதி ஆவார். திருமணத்தின் போது பெண் வீட்டாரிடம் இருந்து அவர் சில லட்சங்களை வரதட்சணையாகப் பெற்றார். சில மாதங்களுக்கு முன்பு ட்விஷா கர்ப்பமானார். ஆனால் அவரது நடத்தையில் சந்தேகப்பட்ட கணவர் சமர்த் சிங்கும், மாமியார் கிரிபாலா சிங்கும் கருவை கலைக்க வற்புறுத்தினர்.

அவர்களின் ஏற்பாட்டின்பேரில் ட்விஷாவுக்கு வலுக்கட்டாயமாக கருக்கலைப்பு நடைபெற்றது. இந்த சூழலில் கடந்த 12-ம் தேதி போபாலில் உள்ள கணவர் வீட்டில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். போதை பழக்கம் மற்றும் மனநல பாதிப்பு காரணமாக ட்விஷா தற்கொலை செய்து கொண்டதாக கணவர் வீட்டார் வாதிட்டனர். ஆனால் அவரது மரணத்தில் சந்தேகங்கள் இருப்பதாக பெற்றோர் குற்றம் சாட்டினர். ட்விஷா குடும்பத்தினரின் போராட்டத்தால் வழக்கு சிபிஐ-க்கு மாற்றப்பட்டது.

சிபிஐ விசாரணையில் கணவர் வீட்டாரின் பல்வேறு வரதட்சணை கொடுமைகள் அடுத்தடுத்து அம்பலமாகி வருகின்றன. இதன் காரணமாக நேற்று முன்தினம் மாமியார் கிரிபாலா சிங் கைது செய்யப்பட்டார். ஏற்கெனவே கைது செய்யப்பட்ட கணவர் சமர்த் சிங் சிறையில் உள்ளார். இருவரும் போபாலில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். இருவரையும் 5 நாட்கள் சிபிஐ காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இந்த வழக்கு குறித்து சிபிஐ வட்டாரங்கள் கூறியதாவது: திருமணத்தின்போதே ட்விஷாவின் குடும்பத்தினரிடம் இருந்து கணவர் வீட்டார் சில லட்சங்களை வரதட்சிணையாக பெற்று உள்ளனர். திருமணத்துக்குப் பிறகு ட்விஷாவின் பெயரில் இருந்த ரூ.20 லட்சம் மதிப்புள்ள பங்குகளை தங்கள் பெயர்களுக்கு மாற்ற கணவர் சமர்த் சிங்கும் மாமியார் கிரிபாலாவும் தொடர்ந்து வற்புறுத்தி வந்து உள்ளனர்.

## இந்தியாவிடம் பிரம்மோஸ் ஏவுகணை, ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் விருப்பம்





புதுடெல்லி: இந்தியாவிடமிருந்து பிரம்மோஸ் ஏவுகணைகள், காமிகேஸ் ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் விருப்பம் தெரிவித்துள்ளது.

சைப்ரஸ் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலைட்ஸ் சமீபத்தில் இந்தியா வந்தார். அப்போது இந்தியாவிடம் இருந்து பிரம்மோஸ் ஏவுகணைகள், 'நாகாஸ்த்ரா-1' மற்றும் 'ஸ்கை ஸ்ட்ரைக்கர்' போன்ற காமிகேஸ் ட்ரோன்களையும் (தற்கொலைப்படை ட்ரோன்கள்) வாங்குவதில் சைப்ரஸ் விருப்பம் தெரிவித்தது. மேலும் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படவும் முடிவு செய்யப்பட்டது. இந்த ராணுவ ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால், துருக்கி அதிபர் ரசிப் தையீப் எர்டோகனுக்கு மிகப் பெரிய பின்னடைவாக இருக்கும். சைப்ரஸ் நாட்டின் வட பகுதியை நீண்டகாலமாக ஆக்கிரமித்து இருக்கும் துருக்கியின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமையும். இதனால் இந்தியாவிடம் பிரம்மோஸ் மற்றும் ட்ரோன்கள் வாங்க சைப்ரஸ் முடிவு செய்துள்ளது துருக்கியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் மீது இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைமேற்கொண்டபோது, பாகிஸ்தானுக்கு துருக்கி நூற்றுக்கணக்கான ட்ரோன்களை ரகசியமாக அனுப்பியது. அவற்றை இந்திய எல்லைகள் நோக்கி அனுப்பியது பாகிஸ்தான். ஆனால், கருவிகள் அவற்றை நடுவானிலேயே சுட்டு வீழ்த்தின. இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணை பாகிஸ்தானின் விமான தளங்களைத் தகர்த்ததை துருக்கி உட்பட உலக நாடுகள் நன்கு அறியும். இதனால் இந்திய ஆயுதங்களை வாங்க சைப்ரஸ் முடிவு செய்திருப்பது துருக்கிக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளது.

## China building massive launch pads near nuclear sites, satellite images show: 'Never seen anything like it'



*A massive military facility is reportedly being developed in China that, according to some security experts, appears to be built to make sure a US first strike against the country's nuclear weapons cannot stop Beijing from launching a response.*

*A day after the findings were made in a Reuters report, US defence secretary Pete Hegseth on Saturday called on Asian partners to increase defence spending to counter China's growing military strength, warning that there was "rightful alarm" over the pace of Beijing's military expansion.*

*"There is rightful alarm regarding China's historic military buildup and the expansion of its military activities in the region and beyond," he said.*

*The size of the project taking shape in China's northwestern desert has surprised even experienced analysts. "I've never seen anything quite like it," said Hans Kristensen, director of the Federation of American Scientists' Nuclear Information Project. "It's an extraordinary effort."*

*China building launch pads near nuclear missile sites: Report*

*China already possesses nuclear missiles capable of reaching any location in the United States. Now, satellite photographs reviewed by Reuters indicate that Beijing is constructing a massive network of launch pads, bunkers and communication facilities close to remote nuclear missile bases that house some of the country's longest-range missiles.*

*The images show more than 80 sites that could potentially be used by China's growing fleet of mobile missile launchers and air-defence systems.*

## 'First NEET, then CBSE, now CUET': Modi govt faces fire over another exam 'glitch', NTA issues clarification on delay



*The government faced fresh political heat on Saturday after the Common University Entrance Test-Undergraduate (CUET-UG) 2026 across several centers in India was delayed. The National Testing Agency (NTA) later blamed a "technical glitch" and the test was held with some delay.*

*Aam Aadmi Party (AAP) leader and former Delhi CM Atishi launched a scathing attack on Union education minister Dharmendra Pradhan, seeing the CUET delay as yet another incident of mismanagement of national-level examinations.*

*"First NEET, then CBSE, now CUET," she said in one of a series of X posts, pointing towards the NEET-UG paper leak, and the controversies around the Class 12 marking system of the Central Board of Secondary Education (CBSE).*

*Congress MP and Lok Sabha Leader of Opposition Rahul Gandhi made a similar argument, adding the Service Selection Commission (SSC) exams as another instance of mismanagement and "dishonesty".*

*He said on X, "NEET. CBSE. SSC. And today CUET. Four exams. One crore children. Not a single one conducted with honesty."*

*He challenged the "claims of 'Vishvaguru'", and said Prime Minister Narendra Modi has "completely ruined the entire education system".*

*"The generation whose future you are destroying - that same generation will hold you accountable," Gandhi claimed.*

*AAP chief Arvind Kejriwal shared one of Atishi's posts with a comment: "The country needs an educated PM." PM Modi has a bachelor's degree as per Delhi University and a master's according to Gujarat University. The CUET glitch is a second blow for the NTA in particular within weeks. The high-stakes medical entrance test NEET-UG 2026, originally held on May 3, was cancelled amid widespread allegations of paper leaks and structural irregularities.*

*The ministry of education has since ordered a CBI probe and scheduled a re-examination for over 22 lakh aspirants on June 21.*

*"Today CUET has been delayed due to a 'technical issue'. Lakhs of students were to take the exam in all parts of India today and after waiting for hours, such notices have been put up outside all centres. Remarkable incompetence @dpradhanbjp!" Atishi wrote, sharing a photo of the NTA notice, and tagging education minister Pradhan.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.